
166




DEC 1942

OV26 : 417
N32
149483

...ஸெல்லர்ஸ் &. பப்ளிஷர்ஸ்
...ள்ளையால் வெளியிடப்பெற்றது.
1932. [விலை அணா 2.

உ

வேலுமயிலும் துணை.

# ஸ்ரீபாலதண்டபாணிபேரில் நவரத்

# தினமும், நாமாவளி, மாலை,

# காவடி வருகை

# வேல்பாட்டுகள்

இஃது

திரிசிரபுரம், மங்களதாஸ் அவர்கள்

இயற்றியது.

திரிசிரபுரம், புஸ்தக வியாபாரம்,

T. S. சுந்தரம் பிள்ளை அவர்களால்

பதிப்பிக்கப் பெற்றது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1932 [விலை அணா 2.

A-12-32

149483
சென்னை-600 008.

682
294.551

உ

வேலுமயிலுந் துணை.

# வேல் பாட்டு

## எண்சீர் விருத்தம்

செந்திநகர் வந்தகுரு பரனே போற்றி
  தென்பழனி மலைவாழும் சிவனே போற்றி
மந்திரச டாக்ஷரத்தின் வடிவே போற்றி
  வயல்சூழ் விராலிமலை வாழ்வே போற்றி
வெந்துயரைத் தீர்க்கவரும் வேலா போற்றி
  வேண்டினர்க் கருள்புரியு மரசே போற்றி
தந்திமுகன் சோதரனே கருணை கூர்ந்து
  தருணமிது வரமருள போற்றி போற்றி.

QD6.47
M32

## வேல்பாட்டு-நொண்டிச் சிந்து

சீர்மேவு தென்பழனி வாழ் வேல் வேல்
  சிவசுப்ர மணிய செங்கடம்ப வேல்

பார்மேவு வல்வினை யெலாம் வேல் வேல்
  பஞ்சுபோல் பறக்கச் செய்யும் பரங்கிரி வேல்

சிக்கல் சிங்காரவடி வேல் வேல் வேல்
  சாமிமலை சாமிநாத சாமிசிவ வேல்

முத்துக்குமார வடிவேல் வேல் வேல்
முத்துக்கு வித்தாகவே முளைத்த வடிவேல்
செந்தில் வடிவேலுக்கினிய வேல் வேல்
தேனபிஷேகமதை செய்து பணிய
சந்தமும் அருள்விளங்க வேல் வேல்
சந்தமிகு திருப்புகழ் சிந்துமுழங்க
ஆயிரத்தெட் டலகுகள்பூட்டி வேல் வேல்
அழகான காவடியை தோளின்மிசை யேற்றி
கோயில்தனை வலமாகச் சுற்றி வேல் வேல்
குமரேசனுக்குரிய காணிக்கையைக் கட்டி
அப்பனுக் கரோகரா வென்று வேல் வேல்
ஆறுமுகன் சேவடிமேல் அன்புமிக கொண்டு
மூப்பொழுதும் முருகனைக் கண்டு வேல் வேல்
முழுமனதொடு செய்வம் களிபெருந் தொண்டு
பன்னீரு பாலாபிஷேகஞ் செய்து வேல் வேல்
பங்கயப்பூஞ் சேவடியில் பாமலரைப் பெய்து
மன்னுவடிவேலவனை நாமே வேல் வேல்
வாழ்த்திமிகத் தோத்தரித்து வணங்கிடுவோமே
கலியுக அவதார ரன்றோ வேல் வேல்
கார்த்திகேயன் மகிமையை காண்பது மென்றோ
மலைமகள் குமரேச னன்றோ வேல் வேல்
வையகத்தில் வேலைவிட தெய்வந்தா னுண்டோ

மிக்க மணல் சக்கரையு மாகும் வேல் வேல்
வெந்த குக்கிட மெழுந்து சுந்தரமாய்க் கூவும்
சிக்கென வெழுந்து மச்சந் தாவும் வேல் வேல்
செப்பரிய சோதனைகள் அற்புதமாய் மேவும்
நத்தியே சமைத்த மச்சங் குதிக்கும் வேல் வேல்
நாவறுத்து வைப்பவர்க்கு தீவிரமா யுதிக்கும்
சித்தர் முத்தர் பத்தர் தினந்துதிக்கும் வேல் வேல்
தேவசேன பதியருள் கீர்த்திபெற செழிக்கும்
கந்தசாமி மந்திரத்தைத் தேடி வேல் வேல்
காவடிகள் எத்தனையோ காணிக்கையாய் நாடி
வந்திறங்கும் பக்தஜனக் கூட்டம் வேல் வேல்
மங்காதபுகழ் படைத்த சங்கம ரெதேஷ்டம்
ஜோதிமிகு கற்பூரத்தின் வாசம் வேல் வேல்
துங்கமிகு சங்கநாத சேகண்டியின் கோஷம்
ஓது பரமானந்த விலாசம் வேல் வேல்
உச்சிதமாக விளங்கும் சர்ச்சனர்கள் நேசம்
சொல்லமுடியாது குகன்பெருமை வேல் வேல்
தூய கார்த்திகேய நின்மகிமையே மகிமை
சூரனைச் சம்மாரஞ் செய்த வேல் வேல்
தோகை மயிலேறி விளையாடுங் கந்தவேள்
வீர ரணதீரவடிவேல் வேல் வேல்
விண்ணவர் சிறை தவிர்த்த வெற்றிபுனைவேல்

வேங்கை மரமாகி நின்றவேல் வேல் வேல்
வேடுவச்சியை மணந்த விதரணவேல்

பாங்கானப் பன்னிருகை வேல் வேல்
பச்சை மயிலேறி விளையாடிவரும் வேல்

தேனுந் தினைமாவுந் தின்றவேல் வேல் வேல்
செட்டிமகன் செட்டியெனும் எட்டுக்குடிவேல்

ஆனைமுகனுக்கிளையவேல் வேல் வேல்
ஆவினன் குடிவளரும் ஆறுமுகவேல்

விதிதனைச் சிறையிட்டவேல் வேல் வேல்
வேண்டியே நற்கீரனை முன் ஆண்டவடிவேல்

கதிர்காமக் கந்தசாமி வேல் வேல் வேல்
கற்கிமுக பூதத்தை வதைத்த வடிவேல்

ஆண்டிமகன் ஆண்டியெனும் வேல் வேல்
அன்றெதிர்த்த சூரர்களை கொன்றருக வேல்

வேண்டியே வரமளிக்கும் வேல் வேல் வேல்
இவல்வினைகள் கருகிட வீசு கதிர்வேல்

தந்தைக் குபதேசம் செய்தவேல் வேல் வேல்
சரவணப் பொய்கையில் ஜனித்த வடிவேல்

செந்தமிழைத்தந்த சிவவேல் வேல் வேல்
செங்கண்மால் மருகனென்ற தங்க வடிவேல்

வேலைவற்ற வேலைவிட்டவேல் வேல் வேல்
மேலவயல் மன்னிய விராலி மலைவேல்

சோலைமலை சுப்ரமண்ய வேல் வேல் வேல்
சூரர்களை வேரறுத்த வீரரண வேல்

மாவடிவை வெற்றிகொண்ட வேல் வேல் வேல்
வள்ளியம்மை யிடத்தில் வளையல் விற்ற வேல்

காவடிக் கன்பான குகவேல் வேல் வேல்
கானக்குற வேடிச்சிமேல் காதல் கொண்ட வேல்

சன்னிதானத்தின் மகிமைசாற்ற வேல் வேல்
சாலமறை யோர்கள்வந்து தாளிணையைப் போற்ற

பொன்னலகு மேனியெங்கும் பூட்ட வேல் வேல்
போதகுருநாதனருள் மேதினியில் தோற்ற

காணவேணும் காணவேணுமென்று வேல் வேல்
கந்தசாமிக் கோயிலுக்குக் காவடிகள் கொண்டு

பேணுமடி யார்கள்பல தொண்டு வேல் வேல்
பிரியமாய்ச் செய்திடுவ ரருளமு துண்டு

இப்புவியில் கண்கண்ட தெய்வம் வேல் வேல்
ஈசன்முரு கேசனொரு மாசிலாத சைவன்

அப்பன்மல ரடிபணி வோமே வேல் வேல்
ஆறுதலை யாகதிரு நீரையணி வோமே

சீர்மேவுந் தென்பழனிவாழும் வேல் வேல்

**வேல் பாட்டு முற்றிற்று.**

---

# வருகை நொண்டிச் சிந்து

சென்னிமலை வேலவனே வாவா வேல் வேல்
திருப்பரங் கிரிவளர் தேசிகனே வாவா

பன்னிருகை யாண்டவனே வேல் வேல்
பச்சைமயில் வாகனத்தி லிச்சமயம் வாவா

பாலாபி ஷேகமதைப் பார்க்க வேல் வேல்
பந்திபந்தியாகத் தொண்டர் வந்திருக்கார் வாவா

கோலாகல பூசையதைக் காண வேல் வேல்
கூறுசங்கு டோன்முரசு கொட்டுகின்றார் வாவா

திருநீறு லபிஷேகஞ் செய்து வேல் வேல்
தெரிசனங் காணவே தேடுகின்றார் வாவா

கருணாகரக் கடவுள் நீயே வேல் வேல்
காசினியில் ஏழைகளைக் காத்தருள வாவா

செம்பொனிரதக் காவடிகள் தூக்கி வேல் வேல்
சேவைபெற ஓடிவந்தோஞ் சேவலனே வாவா

தென்பழனிமலை வாழுந் தேவா வேல் வேல்
தேவர்குறை தீர்க்கவந்த காவலனே வாவா

பங்குனி மகோத்ஸவத்தைப் பார்க்க வேல் வேல்
பத்தியாகத் திருப்புகழ் பாடுகின்றோம் வாவா

அங்கமெலாம் பொன்னலகு பூட்டி வேல் வேல்
அய்யனேநின் சன்னதியை அண்டிவந்தோம் வாவா

பன்னீரபி ஷேகமதைச் செய்து வேல் வேல்
பணியவே தோத்திரங்கள் பண்ணுகின்றோம் வாவா

வன்னமயி லேறியிங்கு வாவா வேல் வேல்
மச்சக்காவடி யனந்தம் வந்திருக்கு வாவா

தெள்ளுதமிழ் ஊமையனும் பாட வேல் வேல்
திருவருளைப் புரிந்த தெய்வமேநீ வாவா

பிள்ளை தமிழ் நற்பகழி கூத்தர் வேல் வேல்
பேசவே கிருபைசெய்த பெருமானே வாவா

சரவணப் பொய்கையில் நீராடி வேல் வேல்
சாமியுன்றன் சந்நிதியில் தானிருக்கோம் வாவா

சிரவண வேதியர்கள் கூடி வேல் வேல்
சிந்தனைசெய் மந்திரத்தைச் செப்புகின்றார் வாவா

கதிர்காம கந்தசாமி வாவா வேல் வேல்
கண்ணிகுற வள்ளியோடு காட்சிதர வாவா

மூதிர்ந்தவனக் கிழவன்போலே வேல் வேல்
முந்துவிளை யாடல்செய்த முருகனே வாவா

மயிலேறி விளையாடி வாவா வேல் வேல்
சிந்தனைசெய் தொண்டர்வினை தீர்கவேநீ வாவா

உன்னையன்றி உற்றதுணை யேது வேல் வேல்
உமையருள் குமரனே ஓடியிங்கு வாவா

அன்னைபிதா குருதெய்வம் நீயே வேல் வேல்
அமர்செய்யும் வல்வினையை அகற்றவே வாவா

149483.

அஞ்சுதலை யானபொழு திங்கே வேல் வேல்
ஆறுதலை யாகவேநீ ஆதரிக்க வாவா

மிஞ்சுமனோ சஞ்சலத்தைத் தீர்க்க வேல் வேல்
வெற்றிமயில் சேவலுடன் வித்தகனே வாவா

இடும்பன் சன்னிதிமுன் கூட்டம் வேல் வேல்
இன்னிதபார் காவடிகள் பொங்குதே பெதேஷ்டம்

கடம்பனே காணிக்கைகள் கோடி வேல் வேல் [நாடி
கண்ணியமாய்க் கொண்டுவந்தோங் காத்திடுவாய்

உத்திரத் திருவிழாவின் காட்சி வேல் வேல்
உத்தமர்கள் கண்டுதெரி சித்திடவே மாட்சி

சித்திரைத் தேரோடுகின்ற சூட்சி வேல் வேல்
தெரிசனம் செய்தவர்க்குத் தீருமன தாழ்ச்சி

அப்பாவுன் பெருமையே பெருமை வேல் வேல்
அடைக்கல மென்றவர்க்குக் கொடுக்காதே வறுமை

எப்பொழுதும் உன்னுடைய மகிமை வேல் வேல்
இயம்பிடும் எங்களிடம் ஏனிந்த பகைமை

காவடியைத் தோளிள்மிசை யேற்றி வேல் வேல்
கந்தவே ளிணைப்பணிந்தோம் சந்ததமும் போற்றி

சென்னிமலை வேலவனே வா வா.

---

வருகை கோண்டிச் சிந்து முற்றிற்று.

# பாலதண்டபாணி நவரத்தினம்

## எண்சீர் விருத்தம்

1 திருவேரகத்திலுறை தென்னு மணியே
திருமணியே அருள்மணியே தெய்வமணியே
குருவாயு சித்தமணி குமர மணியே
கோதிலா ஞானசம்பந்த மணியே
மருவார் கடம்பமணி வரத மணியே
மயிலேறி விளையாடு வண்ண மணியே
வரவேணுஞ் சத்திவடி வேலு மணியே
வள்ளிதெய் வானைமகிழ் சுப்ரமணியே.

2 பிறையற்ற வான்போலே இருளடர்ந்த
பேதைநெஞ்சப் பாதகனே பிணியால் வாடி
சிறையுற்ற காகம்போல் தியங்குகின்றேன்
தேவாதி தேவர்புகழ் செந்தில் வாழ்வே
குறையற்ற செல்வமு நோயற்ற வாழ்வும்
கொடுத்தென்னை வாழ்விப்பதுனது பாரம்
முறையற்ற செய்தியெலாம் முடியாதையா
முருகாநீ வரவேணு மென்ற னருகே.

3 வாயிருந்தும் ஊமைபோல் மௌனமாக
மயில்மீது வீற்றிருக்க வசமோ அய்யோ

தாயிருந்தும் பிள்ளைதான் தரணிமீது
 தத்தளித்து வாடுகின்றேன் தயவு கூராய்
வேயிருந்து வந்த பரமேசன் காதில்
 விஞ்சை பிரணவ மொழியை ஓதிவைத்தாய்
நீயிருந்தும் நான்வருந்தல் நீதியாமோ
 நின்மலனே வரவேணு மென்றனருகே.

4 தெள்ளியசெந் தினைமாவு தேனருந்த
 சிலைவேடன் வளையல்செட்டி கிழவனாக
வள்ளியிடம் விளையாடல் செய்த பின்னும்
 வனக்குறத்தி தன்னைதிரு மணம்புரிந்தோய்
உள்ளமது மெழுகுபோல் உருகுமாறு
 ஓதுகின்ற சிறியேனுக் கருளுமையா
புள்ளிமயி லேறிவிளை யாடுகின்றப்
 புண்ணியனே வரவேணு மென்றனருகே.

5 மஞ்சுவரக் கண்டமட மயிலைப் போலே
 மனமகிழ்ந்து கொண்டாடும் சேயெனக்கு
அஞ்சுதலை யானபொழு தாறுதலையாய்
 அருமைபெறும் நினதுதிரு சேவைதருவாய்
செஞ்சொல்மொழி கிள்ளையென தினப்புனத்தில்
 செவிக்கினிய ஆலோல மென்று கூவும்
வஞ்சிதனை மணம்புரிந்த சத்திவேலா
 மயிலேறி வரவேணு மென்றனருகே.

6 மங்காத நவரத்தின மகுடமுடியும்
வற்றாத கருணைபொழி முகங்களாறும்

தூங்கமிகு வெம்பவளத் துவர்கொள்வாயும்
சுத்ததிட முற்றபணி ரெண்டுதோளும்

கொங்கார் கடப்பமலர் மாலைமார்பும்
கொடியான சேவலுடன் வேலுமயிலும்

இங்கிதமாக யீராறுகையும் யிருகாலும்
தோற்ற யெழுந்தருள்வ தென்றோ.

7 ஆறுமுகம் பன்னிருகை அப்பா வாவா
அஞ்சலென ஆதரிக்க அய்யா வாவா

ஏறுமயி லேறுகின்ற குகனே வாவா
ஈடேறு மார்க்கமதை இயம்ப வாவா

கூறுமடியேன் வினையைத் தீர்க்க வாவா
குஞ்சரியாள் கொஞ்சுமனோ கரனே வாவா

நீறுபுனை யீசனருள் சுதனே வாவா
நேயமொடு காத்தருள வாவா வாவா.

8 அப்பப்பா வேல் முருகா அருகே வாவா
அடிமைபடும் வெந்துயரம் தீர்க்க வாவா

இப்பாரில் எனக்கொருவர் இல்லை வாவா
ஏழைகளைச் சீர்தூக்கி யாள வாவா

தப்பாமல் பேரின்பம் தருக வாவா
சண்முக தயாநிதியே தருணம் வாவா

கைப்பான கடல் சுவற வேலை விட்ட
கந்தவேள் சாமிநீ வாவா வாவா.

9 எல்லாரும் இப்புவியில் வாழ்ந்திருக்க
இங்கொருவன் தாழ்ந்திருக்க வியலோ அய்யா
கல்லாதக் கன்னெஞ்சக் கயவ னென்றே
கைவிடுதல் சரியல்ல கருணை கூர்ந்து
நல்லோர்கள் கூட்டுறவு நல்கி யந்தோ
நாயேனை ரட்சிப்ப துனது பாரம்
வல்லால முண்டசிவ மகனே நீயும்
மயிலேறி வரவேணு மென்றனருகே.

**பாலதண்டபாணி நவரத்தினம் முற்றிற்று.**

---

## மாலை

பாசிப் படர்ந்த மலை சுப்பையா
பங்குனித்தேர் ஓடுமலை
ஊசிபடர்ந்த மலை சுப்பையா
உருத்ராக்ஷம் காய்க்குமலை
மலைக்குள் மலைநடுவே சுப்பையா
மலையாள தேசமப்பா
மலையாள தேசம் விட்டு சுப்பையா
மயிலேறிவாருமையா
அந்தமலைக் குயர்ந்தமலை சுப்பையா
ஆகும்பழனிமலை
எந்தமலையைக் கண்டு சுப்பையா
ஏறுவேன் சந்நிதிமுன்

எருத மலைதனிலே சுப்பையா
ஏறி நின்று தத்தளிக்கப்

பாராமல் கைகொடுப்பாய் சுப்பையா
பழனிமலை வேலோனே

அஞ்சிகை கொஞ்சிவர சுப்பையா
அழகு சடைமேற்புரள

குஞ்சு சடைமீதினிலே சுப்பையா
குயிலிருந்து கூவுதையா

உச்சியில் சடையிருக்க சுப்பையா
உள்ளங்கை வேலிருக்க

நெற்றியில் நீறிருக்க சுப்பையா
நிலமை யையா யிவ்வூரில்

நீலமையா உன்மேனி சுப்பையா
நித்தமையா சங்கநாதம்

தேரையா தைப்பூசம் சுப்பையா
தேசத்தோர் கொண்டாட

இடும்பன் ஒருபுறமாம் சுப்பையா
இருபுரமும் காவடியாம்

கடம்பவனங்கடந்து சுப்பையா
காக்ஷி தரவேணுமிப்போ

காவியே உன்சோமன் சுப்பையா
கடுக்கனையா தங்கநிறம்

பாவினா னென்றுசொல்லி சுப்பையா
பாராம லிருக்கலாமோ

ஆறுவண்டி நூறுசட்டம் சுப்பையா
அதன்மேலே புட்பரதம்

புட்பரதத் துள்ளிருந்து சுப்பைய்யா
புறப்பட்டு வாருமையா.

மாலை முற்றிற்று.

---

நங்கையர் செப்பும்

## ரமணீகர ஒப்பாரி

விலை அணு 1.

கிடைக்குமிடம்,—

T. S. சுந்தரம் பிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
திருச்சினுப்பள்ளி.

O26:417 N32
149483
சென்னை-600 008.

மனோரஞ்சனி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.

போலிப புத்தகங்களை வாங்கி ஏமாறாதீர்கள்!

உஷார்! உஷார்!! உஷார்!!!

நண்பர்கள் புத்தகம் வாங்குமுன் எமது ஒரிஜினல்

## எலக்டிரிக் ரேடியோ கிராம்போன் சங்கீதம் என்பதைக் கவனித்து வாங்கவும்

இதில் 'கோலம்பியா' 'மாஸ்டர்ஸ் வாய்ஸ்' 'ஓடியன் டுவின்' முதலான ரிகார்டுகளில் கீழ்க்கண்ட வித்வான்களால் இதுவரை ரிகார்டு செய்யப்பட்ட புதிய பாடல்களைப் பிளேட் நெம்பர் வரிசையாக இராக-தாள-வர்ணமெட்டுகளுடன், தவறுதலில்லாமல் சுத்தப் பதிப்பாக 8 வித படங்களுடன் அமைக்கப்பெற்றுள்ளது. முக்கியமாக,

மிஸ் K. B. சுந்தராம்பாள், S. G. கிட்டப்பா, S. V. சுப்பைய பாகவதர், D. R. முத்துலக்ஷிமி, N. S. பலூன் ஷண்முகம், மாஸ்டர் வாய்ஸ் T. N. மாணிக்கம், சுப்புலக்ஷிமி, S. R. கமலம், மிஸ். சுந்தரம், விசலூர் சுப்ரமணிய பாகவதர், நாகசாமி பாகவதர், T. M. காதர்பாஷா, கள்ளபார்ட் கார்மேக ஆச்சாரி, A. S. ராஜப்பா, K. V. கேசவ பாகவதர், M. M. மாணிக்க பாகவதர், ஓடியன்-அரியகுடி இராமானுஜ அய்யங்கார் முதலான சங்கீத வித்வான்களின் முழுப் பாடல்களையும் ஒருங்கே திரட்டி 16 பாகங்களாக வெளிவந்துள்ளது. விலை அணா 8.

முக்கியக் கவனிப்பு :—

எலக்டிரிக் ரேடியோ கிராமபோன் சங்கீதம், என்பதைக் கவனித்து வாங்கக் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

எமது விலாசம்:—

T S. சுந்தரம் பிள்ளை,
புக்செல்லர்ஸ் & பப்ளிஷர்ஸ்,
தெப்பக்குளம், திருச்சி.

மனோரஞ்சினி பிரஸ், சௌகார்பேட்டை, சென்னை.